# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**31.10.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## முக்கிய தினங்கள்

1. 31.10.2022
   - ❖ **தேசிய ஒற்றுமை தினம்.**
   - ❖ இந்தியாவின் இரும்பு மனிதர் **சர்தார் வல்லபாய் பட்டேலின்** பிறந்தநாளில் தேசம் அவருக்கு புகழஞ்சலி செலுத்துகிறது.

## மாநில செய்திகள்

1. **சட்டப்பேரவை: 10 ஆண்டு விவாதங்கள் இணையதளத்தில் பதிவேற்றம்**
   - ❖ தமிழக சட்டப்பேரவைக்கான இணையதளத்தில் இதுவரை 10 ஆண்டுகளுக்கான விவாத குறிப்புகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.
   - ❖ மேலும் **1921 ஆம் ஆண்டிலிருந்து** பேரவையில் நடைபெற்ற விவாதங்கள் பதிவேற்றம் செய்ய பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.
   - ❖ தமிழக சட்டப்பேரவை முழுமையாக காகிதம் இல்லாத அவையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பேரவைக்குள் தொடுதிரை வசதியுடன் கணினி அளிக்கப்பட்டுள்ளதுடன், காகிதங்கள் பயன்பாடு குறைக்கப்பட்டுள்ளது.
   - ❖ இந்த நிலையில் சட்டப்பேரவையில் இணையதளத்தையும் **(www.tnassembly.tn.gov.in)** இளைய சமுதாயத்தினர் அதிகம் பயன்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
   - ❖ குறிப்பாக பேரவையில் நடைபெறும் நடவடிக்கை குறிப்புகள் அனைத்தும் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.
   - ❖ கடந்த **2011 ஆம் ஆண்டு மே 23ஆம் தேதி** முதல் இப்போது வரையிலான பேரவை நடவடிக்கை குறிப்புகள் அடங்கிய புத்தகங்கள் பேரவை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

2. **சோலார் பம்ப் செட் அமைத்த காஞ்சிபுரம் விவசாயிக்கு பிரதமர் மோடி பாராட்டு**
   - ❖ தமிழகத்தின் காஞ்சிபுரத்தை சேர்ந்த எழிலன் என்ற விவசாயி பிரதமரின் **'குஷீம் யோஜனா'** திட்டத்தின் பயனை அடைந்துள்ளார்.
   - ❖ அவரது பண்ணையில் **10 குதிரை திறன் கொண்ட சோலார் பம்ப்செட்டை** அமைத்துள்ளார். இதன் மூலம் அவரது பண்ணையில் பாசனத்துக்கு என தனியே செலவு செய்வது கிடையாது.
   - ❖ வேளாண் நிலத்தில் பாசனம் செய்ய அரசின் மின்விநியோகத்தை அவர் நம்பியிருக்கவில்லை. அவருக்கு மின் கட்டண செலவே கிடையாது.

## மத்திய செய்திகள்

1. **காப்பீடு சார்ந்து சேவைகளுக்கு ஒரே வலைதளம்**
   - ❖ காப்பீடு சார்ந்த சேவைகளை **'பீமா சுகம்'** என்ற ஒரே வலைதளத்தில்

வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் ( ஐஆர்டிஏஐ) தலைவர் **தெபாசிஷ் பாண்டா** தெரிவித்துள்ளார்.

- இணையவழி பண பரிவர்த்தனையில் யுபிஐ தொழில்நுட்பம் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியதை போல காப்பீட்டு துறையில் 'பீமா சுகம்' வலைதளம் பல மாற்றங்களை ஏற்படுத்தும்.
- அந்த வலைதளத்தின் மூலமாக காப்பீட்டு **விற்பனை, புதுப்பித்தல், காப்பீட்டுத் தொகையை வழங்குதல்,** உள்ளிட்ட அனைத்து சேவைகளையும் பெற முடியும்.

## 2. மனதின் குரல்

- விண்வெளி, சூரிய எரிசக்தி உற்பத்தி துறைகளில் இந்தியா நிகழ்த்தி வரும் அதிசயங்களை கண்டு உலக நாடுகள் வியப்படைந்து வருவதாக மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருள்களை பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வு மக்களிடையே அதிகரித்துள்ளது.
- **தமிழகத்தின் கோவையில் உள்ள ஆனை கட்டியில்** பழங்குடியின பெண்களின் குழு சுற்றுச்சூழலுக்கு உகந்த மண்ணாலான பத்தாயிரம் தேநீர் கோப்பைகளை ஏற்றுமதி செய்துள்ளது.
- **தேநீர் கோப்பைகளை** தயாரிப்பதற்கான களிமண் கலவை தொடங்கி, இறுதி கட்ட பேக்கேஜிங் வரை அனைத்து வேலைகளையும் அப்பெண்களே மேற்கொண்டனர்.
- இந்த அற்புதமான முயற்சியை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்றார். இயற்கையையும் சூரியனையும் வழிபடும் விழாவாக **'சத்'** கொண்டாடப்படுகிறது.
- சூரிய ஆற்றல் மூலமாக எரிசக்தி உற்பத்தி செய்வதில் இந்தியா முன்னிலை வகுத்து வருகிறது. நாட்டின் முதல் முழு நேர சூரிய எரிசக்தி கிராமமாக **குஜராத்தின் மொதேரா** அறிவிக்கப்பட்டுள்ளது.

## 3. பிரம்மோஸ் ஏற்றுமதியால் ரூபாய் 41 ஆயிரம் கோடி வருவாய் ஈட்ட வாய்ப்பு

- உலகில் எந்த நாட்டிலும் பிரம்மோஸ் போன்ற ஏவுகணை இல்லை. போட்டியே இல்லாத வர்த்தகம் என்பதால் ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகம்.
- இதை வாங்க **14 நாடுகள்** ஆர்வமாக உள்ளதால் சுமார் 41 ஆயிரம் கோடிக்கு மேல் வருவாய் ஈட்ட வாய்ப்பு உள்ளது என்று விஞ்ஞானி **ஆ.சிவதாணு பிள்ளை** தெரிவித்துள்ளார்.
- **பிரம்மோஸ் ஏவுகணையின் சிறப்பு என்ன?**
    - கண்டம் விட்டு கண்டம் பாயும் **அக்னி, பிரித்வி** போன்ற ஏவுகணைகள் நம்மிடம் உள்ளன.
    - இவை அதிக உயரத்தில் பறப்பதால் ரேடார் , செயற்கைக்கோள்

போன்ற போன்றவை மூலம் அதன் நகர்வை எதிரி நாடுகள் கண்காணிக்க முடியும்.

- தாழ்வான உயரத்தில் சென்று எதிரிகளின் நிலைகளை தாக்கி அளிக்கும் வகையில் பிரம்மோஸ் உருவா உருவாக்கப்பட்டுள்ளது. இது **ஒலியை விட 3 மடங்கு** வேகத்தில் பாயும்.
- சூப்பர் சானிக் ஏவுகணை அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளதை விட **ஒன்பது மடங்கு** அதிக வேகம் கொண்டது.

- அடுத்த தலைமுறை பிரம்மோஸ், ஹைப்பர்சானிக் பிரம்மோஸ் உருவாக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.
- இது ஒலியை விட **ஏழு மடங்கு** வேகமாக செல்லக்கூடியது. தற்போதைய பிரமோஸ் மூன்று டன் எடை கொண்டது.
- அதை **1.5 டன்னாக** குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன் மூலம், விமானத்தில் அதிக எண்ணிக்கையில் கொண்டு செல்ல முடியும். ரஷ்யா உடன் கூட்டு சேர்ந்து இப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- ரஷ்யாவுடன் இணைந்து தலா 150 மில்லியன் டாலர் என மொத்தம் **300 மில்லியன் டாலர்** முதலீடு செய்து இந்த ஏவுகணை திட்டம் செயல்படுத்தப்பட்டது.
- ஆனால் 7 பில்லியன் டாலர் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளது. இதை வாங்க 14 நாடுகள் ஆர்வமாக உள்ளன.
- அப்போது ஏற்றுமதி **ஐந்து பில்லியன் டாலரை** ( சுமார் ரூபாய் 41 ஆயிரம் கோடி) தாண்டி விடும். மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சரின் அறிவியல் ஆலோசகராகவும், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமை (DRDO) பொறுப்பிலும் அப்துல் கலாம் இருந்தபோதுதான், பிரம்மோஸ் தயாரிப்புக்காக இந்தியா-ரஷ்யா இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.
- அவரது ஆலோசனையை கேட்கக்கூடிய அரசாகவும் அன்றைய அரசு இருந்தது. அன்று பிரதமராக இருந்த **நரசிம்மராவிடம் கலாமும்,** நானும் சேர்ந்து தான் பிரம்மோஸ் திட்டம் குறித்து விவரித்தோம்.
- கலாம் புது சிந்தனையை ஆதரிப்பவர், தொலைநோக்கு பார்வையாளர். அதனால் இதெல்லாம் சாத்தியமானது. இந்த ஏவுகணை கடந்த 2001ல் பரிசோதிக்கப்பட்டது.

### 4. விபத்துக்குள்ளான தொங்கு பாலம்

- குஜராத்தில் ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டிருந்த நூறாண்டு பழமை வாய்ந்த தொங்கு பாலம் அறுந்து ஏற்பட்ட விபத்தில் 60 பேர் உயிரிழந்தனர்.
- கடந்த 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தின் போது குஜராத் மாநிலம் **மோர்பி** நகரில் உள்ள **மச்சு நதி** மீது **233 மீட்டர் நீள தொங்கு பாலம்** அமைக்கப்பட்டது.

## 5. சரக்கு விமான உற்பத்தி ஆலை

- இந்திய விமானப்படைக்கு சி295 ரக சரக்கு விமானங்களை வாங்குவதற்கு ஐரோப்பிய நிறுவனமான ஏர்பஸ் பாதுகாப்பு விண்வெளி நிறுவனத்துடன் சுமார் **₹21,935 கோடி** மதிப்பிலான ஒப்பந்தம் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.
- அந்த ஒப்பந்தத்தின் படி சி295 ரகத்தைச் சேர்ந்த 16 சரக்கு விமானங்களை ஸ்பெயினில் தயாரித்து நான்கு ஆண்டுகளுக்குள் ஏர்பஸ் நிறுவனம் இந்தியாவிற்கு வழங்க உள்ளது.
- கூடுதலாக 40 சரக்கு விமானங்களை டாடா நிறுவனத்துடன் இணைந்து உள்நாட்டிலேயே ஏர்பஸ் நிறுவனம் தயாரிக்க உள்ளது.
- சரக்கு விமான உற்பத்தி ஆலை குஜராத்தின் வதோதரா நகரில் அமைக்கப்பட உள்ள நிலையில் அதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.
- நாட்டின் ராணுவத்துக்கு வலிமை அளிப்பதோடு மட்டுமல்லாமல் விமான தயாரிப்பு சூழலையும் நாட்டில் உருவாக்கும் **'இந்தியாவில் தயாரிப்போம்', 'உலகிற்காக தயாரிப்போம்'** என்ற கொள்கைகளை இந்தியா கடைப்பிடித்து வருகிறது.
- **முதல் முறை:**
    - ராணுவ பயன்பாட்டுக்கான விமானம் ஆனது தனியார் நிறுவனத்தால் இந்தியாவில் தயாரிக்கப்பட உள்ளது இதுவே முதல் முறையாகும்.
    - சி295 சரக்கு விமானம் ஆனது ஐரோப்பிய நாடுகளுக்கு வெளியே தயாரிக்கப்படவுள்ளதும் இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.
    - இந்தியாவுக்கான **56 சரக்கு விமானங்களை** வழங்கிய பிறகு **வதோதரா ஆலையில்** தயாரிக்கப்படும் சரக்கு விமானங்கள் இந்திய அரசின் அனுமதி உடன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட உள்ளது.